**ஒதுக்கீட்டுத் தலைப்பு 256 - மாவட்ட செயலகம் கம்பஹா**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2012 ஆம் ஆண்டு**

## 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பணிகள்

(அ) வறுமையை ஒழிப்பதற்கான ஆரம்ப முயற்சிகள்

(ஆ) தேர்தல்களை ஒருங்கிணைத்தல்

(இ) அபிவிருத்திச் செயற்திட்டங்களை திட்டமிடலும் மேற்பார்வை செய்தலும்.

(ஈ) அனர்த்த நிவாரணச் செயற்திட்டங்களையும் புனர்நிர்மாணச் செயற்திட்டங்களையும் நிர்வகித்தல்

(உ) மாவட்டச் செயற்திட்ட நிர்வாகமும் வழிகாட்டலும்

(ஊ) வருமானங்களைச் சேகரித்தல்.

## 1.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

| | | | |
|---|---|---|---|
| (அ) | அத்தனகல்ல | (ஏ) | களணி |
| (ஆ) | பியகம | (ஐ) | மஹர |
| (இ) | தொம்பே | (ஒ) | மினுவாங்கொடை |
| (ஈ) | திவுலபிட்டிய | (ஓ) | மீரிகம |
| (உ) | கம்பஹா | (ஔ) | நீர்கொழும்பு |
| (ஊ) | ஜா-எல | (∴) | வத்தளை |
| (எ) | கந்தானை | | |

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

கம்பஹா மாவட்ட செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் இலங்கை சனநாயக சோசலிசக்

குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 திசெம்பர் 17 ஆந் திகதி மாவட்டச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் கம்பஹா மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) இலிருந்து (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.6 இலிருந்து 1.14 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை**

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்படவில்லை என்பது தெரிவுச் செய்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| நட்டங்கள் சேதங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| களஞ்சிய இருப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454 |
| பதிவேட்டுப்பொருட் பதிவேடு | நிதிப்பிரமாணம் 751 |

**(ஆ) ஒதுக்கீட்டுக்கணக்கு**

**(i) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்**

கம்பஹா மாவட்ட செயலகத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடு ரூபா 803,534,134 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 790,517,139 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய சேமிப்பு ரூபா 13,016,995 ஆக இருந்ததுடன் அது மொத்த தேறிய ஏற்பாட்டில் 1.6 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. விபரம் பின்வருமறு.

| செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவருபவை | 583,375,000 | 775,584,134 | 10,304,829 | 1.3 |
| மூலதனம் | 27,950,000 | 27,950,000 | 2,712,166 | 9.7 |
| மொத்தம் | 611,325,000 | 803,534,134 | 13,016,995 | 1.6 |

**(ii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 21 அமைச்சுக்களிடமிருந்து ரூபா 2,887,146,236 தொகையும் 13 திணைக்களங்களிடமிருந்து ரூபா 2,908,670,634 தொகையுமாக ருபா 5,795,816,870 கூட்டுமொத்த தொகையான நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப் பட்டிருந்ததுடன் இதில் முறையே ரூபா 2,635,849,777 மற்றும் ரூபா 2,855,387,481 தொகையாக ரூபா 5,491,237,258 கூட்டுமொத்த தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 304,579,612 தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

25601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா | ரூபா | ருபா | ரூபா | ரூபா | ரூபா |
| 65,000,000 | 64,827,955 | 53,500,000 | 56,972,662 | 232,500,000 | 228,105,663 |

25601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 2,155,041 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந்த நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளை அறவீடு செய்வதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

**(ஈ) பொதுவைப்புக் கணக்கு**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் பொது வைப்புக் கணக்கிலுள்ள மீதி ரூபா 366,506,661 ஆக இருந்ததுடன் அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2 ஆண்டுகளுக்கும் மேலாக இருக்கின்ற ரூபா 134,392,723 கூட்டுமொத்தமான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையிடமிருந்து கடைத்திருந்த ரூபா 10,000 தொகை குறித்த கருமம் நிறைவேற்றப்படாது மீளளிக்கப்பட்டிருந்தது.

## 1.6 நல்லாளுகை மற்றும் கணக்களிப்பொறுப்பு

### 1.6.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன தலைவர்களிற்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது தொடர்ந்துவரும் 03 ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று மாவட்டச் செயலகத்தினால் வருடத்தின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டும். எனினும், 2012 திசெம்பர் 31 வரை அத்தகைய திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மேலே பந்தி 1.6.1 இல் குறிப்பிடப்பட்ட பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க 2010 ஆம் ஆண்டு மற்றும் அதற்குப் பின்னைய செயல் நடவடிக்கைத் திட்டம் மாவட்ட செயலகத்தினால் தயாரிக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

மேலே பந்தி 1.6.1 இல் குறிப்பிடப்பட்ட அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மாவட்ட செயலகத்தினால் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 ஒக்தோபர் 02 ஆந் திகதி பொது நிர்வாக அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டதாக மாவட்டச் செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

**1.6.4 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6.5 உள்ளகக் கணக்காய்வு**

2012 ஆம் ஆண்டின் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் பிரகாரம் 13 பிரதேச செயலகங்களில் 07 செயலகங்களை உள்ளடக்கும் வகையில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் மே முதல் திசெம்பர் வரை மாதாந்த முன் நிகழ்ச்சிதிட்டங்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6.6 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை செயற்படுத்தல்**

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் காலாண்டிற்கு ஆகக் குறைந்தது ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் நடாத்த வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆணடிற்காக இரண்டு தடவைகள் மாத்திரம் குழு கூடியிருந்தது.

**1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்ட குறித்த சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|
| கட்டிடங்கள் | 05 | 2 வருடங்களிற்கு குறைவாக |
| ஏனைய சொத்துக்கள் | 05 | 2 வருடங்களிற்கு குறைவாக |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துல்**

2012 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்த மேலதிகங்கள், குறைவுகள் தொடர்பிலும் ஏனைய பரிந்துரைகள் சம்பந்தமாகவும் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினர்களிற்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

கம்பஹ மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான கெப் வாகனமொன்று 2012 யூலை முதல் முறையற்ற விதத்தில் கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2007 ஆம் ஆண்டு முதல் 2012 திசெம்பர் வரை மாவட்டச் செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 168 அலுவலக உபகரண விடயங்கள் களஞ்சியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான விபரங்கள் குறித்த பிரிவுகளின் பொருட்பதிவேட்டுப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பெறுவனவுகள் குறித்த விபரங்கள் களஞ்சிய இருப்புப் பதிவேட்டில் பதியப்பட்டிருந்த போதிலும், வழங்கப்பட்டமைக்கான பதிவுகள் செய்யப்படாதிருந்த 22 கணனிகள் களஞ்சியத்தில் காணப்படவில்லை.

(iii) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 711,639 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 130 விடயங்களின் பெறுவனவு விபரங்கள் களஞ்சிய இருப்புப் பதிவேட்டில் பதியப்பட்டிராததுடன் அந்த உபகரணங்களின் விநியோகம் தொடர்பான விபரங்களும் பதியப்பட்டிருக்கவில்லை.

(iv) மாவட்டச் செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பல்வேறு வகைகளைச் சேர்ந்த 53 விடயங்கள் 13 பிரதேச செயலங்களிற்கு

பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த பிரதேச செயலகங்களால் பெறுவனவு அறிவித்தல்கள் அனுப்பப்பட்டிருக்கவில்லை.

**1.8 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மை |
|---|---|---|---|
| (i) | நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | |
| | 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தகள் அதிகாரச்சட்டத்தின் 6(1) ஆம் உப பிரிவு | 6,067,729<br>(மதிப்பீடு) | (i) கம்பஹ மாவட்டச் செயலகத்தின் உத்தியோகத்தர் குடும்ப உத்தியோகபூர்வ விடுதி நிர்மாணித்தல் வேலைகளிற்காக விலைமனுக்களை வழங்கியிருந்த 06 ஒப்பந்த காரர்கள் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவுசெய்து கொண்டிருக்கவில்லை.<br><br>(ii) கம்பஹ மாவட்டச் செயலகத்தின் குடும்ப உத்தியோகபூர்வ விடுதி நிர்மாணித்தல் வேலைகளிற்கான கேள்வி உடன்படிக்கை 60 நாட்களிற்குள் பதிவுசெய்யப் பட்டிருக்கவில்லை. |
| | 12 ஆம் பிரிவு | 6,067,729<br>(மதிப்பீடு) | (i) செல்லுபடியாகும் பதிவுசெய்யப்பட்ட சான்றிதழ் இன்றிய ஒப்பந்த காரரின் கூறு விலைகள் தொடர்பில் கொள்வனவுச் சபை மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

(ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்

| | | |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 570 | | ரூபா 1,822,080 மொத்தமான 19 காணி வைப்பு மீதிகள் 10 முதல் 27 ஆண்டுகள் வரையான காலத்தினுள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப் பிரமாணம் 756 | | மாவட்டச் செயலகத்தின் கணனி பயிற்சி நிலையத்தின் பதிவேட்டுப் பொருட்கள் மீளாய்வாண்டிற்காக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

(iii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவை

| | | |
|---|---|---|
| 2.7.7 ஆம் வழிகாட்டல் | 884,130 | பிரதேச செயலகமொன்றின் கொள்வனவுச் சபை தீர்மானத்தின் மீது மாவட்டச் செயலகத்தினால் தளாபடங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| -மேற்படி- | 129,716 | தவறாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறு விகைளும் தொழில்நுட்ப மதிப்பீட்டிற்கும் கொள்வனவுத் தீர்மானங்களிற்கும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன. |

(iv) திறைசேரிச் சுற்றறிக்கைகள்

| | | |
|---|---|---|
| 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐயுஐ/2002/02 ஆம் இலக்க சுற்றுநிருபம் | | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலங்களிற்கு சொந்தமாகக் காணப்படும் சகல கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள் தொடர்பிலான விபரங்களை வெளிப்படுத்தக் கூடியவாறு கணனிச் சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 1.9 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதிலுள்ள பலவீனங்கள்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடப்படுதல், செயற்திட்டங்களை முடிவுறுத்தாது கைவிடப்படுதல் செயற்திட்டத் தாமதங்கள் தொடர்பில் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

(i) மஹர பிரதேச செயலகத்தின் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்திசெய்யப்பட வேண்டிய திகதி | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவு | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா | |
| எடிகெஹல்கல்ல மேற்கு நீர் செயற்திட்டம் | 980,000 | 2012.12.17 | 2012.12.31 | 834,308 | தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் நீர்க் குளாய்களை பொருத்தும் நடவடிக்கைகள் தாமதமடைந்தமை |

(ii) 2012 ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் மாவட்டச் செயலகத்தினால் செயற்படுத்தப்பட்ட 2421 செயற்திட்டங்களில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருக்காத செயற்திட்டங்களின் எண்ணிக்கை 97 ஆகக் காணப்பட்டதுடன் அது தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | பூர்த்திசெய்யப்பட வேண்டிய திகதி | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவு | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | |
| ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை | 101,237,863 | 2012.12.31 | 9,903,965 | நிதி ஏற்பாடு கிடைப்பதில் தாமதம். தாமதித்து வேலை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ஆரம்பிக்கப்படல் |
| விசேட செயற்திட்டம் | 4,800,000 | 2012.12.31 | 481,292 | நிதி ஏற்பாடு கிடைப்பதில் தாமதம். தாமதித்து வேலை ஆரம்பிக்கப்படல் |
| கமநெகும | 10,585,000 | 2012.12.31 | 8,248,500 | நிதி ஏற்பாடு கிடைப்பதில் தாமதம். தாமதித்து வேலை ஆரம்பிக்கப்படல் |

**(ஆ) நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் சேயன்முன்னேற்றம் அடையப்பட்டிருக்காத செயற்திட்டங்கள்**

கிரிகின்ன மேற்கு நீர் வழங்கல் திட்டத்தின் வேலைகளைப் பூரணப்படுத்தல் மற்றும் நீர் வழங்கல் திட்டத்தின் குளாய் வழியின் 520 மீற்றர்களிற்காக நீர்க் குளாய்களை வழங்கி பொருத்தும் செயற்திட்டத்திற்காக 2012 நவம்பர் 29 ஆந் திகதி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு ரூபா 892,436 ஆன மொத்தத் தொகையும் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2013 யூன் 03 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்தின் எவ்வித வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.10 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

களஞ்சிய இருப்புப் புத்தகத்தின் படி விநியோகிக்கப்பட்ட திகதி எதுவெனக் குறிப்பிடப்படாதிருந்த 4 மல்ரிமீடியா புரஜெக்டர்கள் கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், பௌதீக பரிசோதனையின் படி ரூபா 58,000 பெறுமதியான ஒரு மல்ரிமீடியா புரஜெக்டர் குறைவாக இருந்தமை வெளிப்பட்டது.

**1.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அதிகாரமின்றிய கொடுக்கல்வாங்கல்கள்

களனி பிரதேச செயலகத்தின் 30’ x 20’ பரப்பளவு கொண்ட கட்டிடத்தின் முதலாம் மாடியினை நிர்மாணிக்கையில் மிகையான மற்றும் மேலதிக வேலைகளிற்காக முறையே ரூபா 147,007 மற்றும் ரூபா 366,733 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக அங்கிகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

1.12 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) களனி பிரதேச செயலகத்தின் 30’ x 20’ பரப்பளவு கொண்ட கட்டிடத்தின் கீழ் மாடியினை நிர்மாணிக்கையில் மிகையான மற்றும் மேலதிக வேலைகளுடன் கூடிய மொத்தப் பெறுமதி ரூபா 1,874,793 ஆன போதிலும், 2012 திசெம்பர் 31 ஆந் திகதி கொடுப்பனவை மேற்கொள்கையில் மொத்த வேலைகளின் பெறுமதி ரூபா 1,961,034 எனக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 86,241 மேலதிகமாகச் செலுத்தப்பட்எடிருந்தது.

(ஆ) கம்பஹ மாவட்டத்தின் 04 பிரதேச செயலகங்களால் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நலனாளிகளிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த ரூபா 3,810,000 கிரயம் கொண்ட 10400 கோழிக் குஞ்சுகளில் ரூபா 1,029,000 கிரயமான 28 சதவீதற்குச் சமமான கோழிக் குஞ்சுகள் இறந்திருந்தமையாலும் ரூபா 606,550 கிரயமான 18 சதவீதற்குச் சமனானவை சேவல் குஞ்சுகளாக காணப்பட்டமையாலும் ஒட்டு மொத்த செலவில் 45 சதவீதத்திற்குச் சமனான ரூபா 1,635,550 தொகை சிக்கனமற்ற செலவினமாகியிருந்து.

**1.13 முகாமைத்துவ பலவீனங்கள்**

தீர்வு காணப்பட்டிருக்காத கணக்காய்வுப் பந்திகள்

மாவட்டச் செயலகத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகள் அரசாங்க கணக்குகள் குழுவினால் பரிசோதிக்கப்பட்டதன் பின்னர் பின்தொடர் நடவடிக்கைகள் முடிவடையாதுள்ள பந்திகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு** | | **தொடர்புடைய விடயம்** |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2006 | 2.4 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கல் 2006 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 4,413,253 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அதில் ரூபா 474,658 தொகை 02 ஆண்டுகளிற்கு மேல் பழமைவாய்ந்தவையாகும். |
| 2006 | 9.2 | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல் |

| | | |
|---|---|---|
| 2006 | 10.8 | களனி பிரதேச செயலகத்தின் அதிகாரப் பிரதேசத்தில் அரசாங்கத்திற்கு உரித்தான பொதுக் கட்டிடங்களில் 16 கிராம உத்தியோகத்தர் அலுவலகங்கள் தாபிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றிற்காக பல வருடங்கலாக அலுவலகப் படி செலுத்தப்பட்டிருந்தது. |

## 1.14 மனிதவளங்கள் முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஸ்ட மட்டம் | 45 | 42 | 03 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 27 | 22 | 05 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 1639 | 1336 | 303 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 128 | 110 | 18 | 02 |
| | மொத்தம் | 1839 | 1510 | 329 | 02 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியளவில் 329 வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாமல் போயிருந்தது.

(ii) சேவை நிலைய இடமாற்றத்தின் மீது மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்த இரண்டு சாரதிகளினால் மேலதிகம் ஏற்பட்டிருந்தது.